06-12-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இலங்கையில் பெருகிவரும் பாலியல் குற்றங்கள்t**

**தொடக்கவுரையாடல் : க. ஆதித்தன்**

இலங்கையில் தற்போது ஊடகங்களில் பாலியல் குற்றங்கள் தொடர்பான செய்திகள் அதிகமதிகம் வெளிவருகின்றன. சிறுவர் மீதான பாலியல் குற்றங்கள் தொடக்கம் பல்வேறு விதமானவையாக இச்செய்திகள் அமைகின்றன. இந்நிலையானது இலங்கையில் தற்போது பாலியல் குற்றங்கள் பெருகிவருவது போல் ஒரு தோற்றத்தினை ஏற்படுத்துகிறது.

போர்ச்செய்திகள் இல்லாமலிருக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாறான செய்திகள் ஊடகங்களில் முதன்மை பெறுகின்றன என்பதும் இதில் அவதானிக்கத்தக்கது. இவ்வாறான செய்திகள் பரவலாக வெளிவந்துகொண்டிருந்தபோதும் இச்செய்திகள் சமூகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தாதவையாக வெறும் செய்திகளாக மக்களுக்குப் பழகிப்போய்விட்டன என்பது கவலைக்குரியதாகும்.

பாலியல் குற்றங்களை வெறும் சட்டரீதியான குற்றங்களாகவும், பெண்களுக்கெதிரான வன்முறையாகவும் மட்டுமே பார்ப்பது அக்குற்றங்களின் ஆழ அகலங்களைப் புரிந்துகொண்டு அவற்றை ஒழிப்பதற்கு உதவப்போவதில்லை.

எமது சமூகத்தில் பாலியல் பற்றிய ஆழமான குற்றவுணர்வு விதைக்கப்பட்டுள்ளது. இது காலகாலமாகத் தொடர்ந்து வரும் மரபு என்ற பெயரிலும், விக்டோரியன் காலக் கிறிஸ்தவ காலனியச் சிந்தனைகளின் வழியாயும், மதங்களின் பெயராலும் விதைக்கப்படுகிறது. பாலியலை ஓர் இன்றியமையாத இயற்கை நிகழ்வாகப் பார்ப்பதை விடவும் ஒரு குற்றமாக, அருவருப்பானதாக, மறைவானதொன்றாகப் பார்க்கின்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அது தவிர, பால்முதிர்ச்சி அடைவதற்கும் திருமணத்திற்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துக்கொண்டே போகிறது. திருமணம் மட்டுமே பாலுறவுக்கான ஒரேயொரு வாய்ப்பாக ஆக்கப்பட்டுள்ள எமது சமூக கலாசார அமைப்பில் இவ்விடைவெளி பாலியல் வேட்கையின் நெருக்கடியை பெரும் உளப்பாதிப்போடு மனிதர்கள் எதிர்கொண்டாகவேண்டிய காலப்பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

> பாலியல் குற்றங்களைச் செய்வோருக்கு, தாம் குற்றத்தைச்செய்துவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பிவிடலாம் என்கிற நம்பிக்கை இருப்பதுதான் குற்றங்கள் பெருகுவதற்கான அடிப்படைக்காரணமாகும்.
>
> ஆட்சி, அதிகார அமைப்புக்களில் முழுமையான மாறுதல் ஒன்றைக்கொண்டுவராமல் இதனைத் தடுக்க முடியாது

உலகமயமாக்கலின் விளைவுகளான பண்பாட்டுக்கோல மாறுபாடுகளும் நுகர்வுக்கலாசாரமும் பாலியல் தேவையினை பெரும் சந்தையாக மாற்றத்துடிதுக்கொண்டிருக்கின்றன. இதற்காக மனிதர்களை பாலியல் நெருக்கடிக்குள் (Sexual tention) எப்போதும் அமிழ்த்தி வைத்திருக்க விரும்புகின்றன.

ஒருபுறம் மதங்களும் கலாசாரக் காவலர்களும் பாலியலை பேயாகவும் பிசாசாகவும் ஆக்கிவைத்திருக்க, மறுபுறம் உலகமய நுகர்வுப்பண்பாடு பாலியல் சந்தையினை அதி வேகமாக விரிவுபடுத்த விழைகிற இந்த நிலையானது மனித மனங்கள் பாலியல் பிறழ்வுகளை நோக்கித்தள்ளப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாகிறது.

இந்நிலையில் பாலியலை அறிவியல் கண்ணோட்டத்திலும் இயல்பான அதன் தன்மையுடனும் புரிந்துகொள்வதற்குப்பதிலாக எம் மனிதர்கள் ஏறுமாறாகப் புரிந்துகொள்கிறார்கள். பாலியலை வன்முறையுடனும் பிறழ்வுடனும் அணுகுகிறார்கள்.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**முதுமை பற்றி ஓர் உரையாடல்**

திரு. இராஜரட்ணம் | 13-12-2012



சுப்பிரமணிய பாரதி

**சுப்பிரமணிய பாரதி (திசம்பர் 11, 1882 - செப்டம்பர் 11, 1921).** இவர் பாரதியார் என்றும், மகாகவி என்றும் அழைக்கப்படுகிறார். பாரதி, ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர். சுப்பிரமணியன் என்ற இயற்பெயர் கொண்டவர்.

தமிழின் கவிதை மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர். தம் எழுத்துக்களின் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர். இவரின் சமகாலத்தைய மனிதர்கள் மகாத்மா காந்தி, பால கங்காதர திலகர், உ. வே. சாமிநாதையர், வ. உ. சிதம்பரம் பிள்ளை மற்றும் மகான் அரவிந்தர் ஆகியோர்.

தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு மற்றும் பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையில் பெருகிவரும் பாலியல் குற்றங்கள்

முன்பக்கத் தொடர்ச்சி..

சமப்பாலுறவாளர்கள், மாற்றுப்பாலினர்கள் போன்றவர்களது இயற்கையான, சிறுபான்மைப் பாலியல் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றமையும், அவர்கள் அடக்குமுறைக்குள்ளாக்கப்படுகின்றமையும் கூட இத்தகைய பிறழ்வுப்பார்வையினாலேயே ஏற்படுகிறது.

பால்முதிர்ச்சிக்கும், திருமணத்துக்கும் இடையிலான காலப்பகுதியில் மனிதர்களது பாலியல் தேவைகளைக் கையாள்வதற்கான சரியான பொருத்தமான பொறிமுறை எம்மிடம் இல்லை. வளர்ச்சியடைந்த நாடுகளில் இக்காலப்பகுதியில் பாலுறவு மோசமாகத் தடுக்கப்படுவதில்லை. இக்காலப்பகுதி மனித உளவியலில் பெரும் செல்வாக்குச்செலுத்துவதாக இருப்பதால், திருமணத்தின் பின்பும் அதன் பாதிப்புக்கள் தொடர்கின்றன.

திருமணமானபின்னர் கூட துணைவி மீது ஆண்கள் பாலியல் குற்றங்கள் புரிபவர்களாகவே காணப்படுகின்றனர்.

பெண்கள் மீது ஆண்கள் பாலியல் குற்றங்கள் புரிவதற்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் காணப்படும் அதிகார சமனிலையின்மையும் காரணமாகிறது. ஆணிடத்தில் ஏராளமான அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்கும் எமது சமூக கலாசார பொருளாதார அமைப்பானது பாலியல் குற்றங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் அடிப்படைக்காரணமாகிறது. குற்றம் புரிகிற ஆணை சமூகம் மென்மையாகக்கண்டிப்பதும் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணை நேரடியாகவும் மறைமுகமாகவும் மிகக்கடுமையாகத் தண்டிப்பதும் தான் யதார்த்தமாக இருக்கிறது.

பாலியல் குற்றங்களைச் செய்வோருக்கு, தாம் குற்றத்தைச்செய்துவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பிவிடலாம் என்கிற நம்பிக்கை இருப்பதுதான் குற்றங்கள் பெருகுவதற்கான அடிப்படைக்காரணமாகும். பொலிஸ் முதல் அரசியல் அதிகார வர்க்கம் வரையிலான தொடர்புகளும் ஊழலும் சீர்கேடுகளும் இவ்வாறு குற்றவாளி தண்டனையிலிருந்து இலகுவாகவே தப்பிவிடுவதற்கு உதவியாக அமைகிறது. இந்த அதிகார அமைப்புக்களில் முழுமையான மாறுதல் ஒன்றைக்கொண்டுவராமல் இதனைத் தடுக்க முடியாது.

### முதுமை பற்றி ஓர் உரையாடல்
(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

* முதுமை பற்றிய அறிவியல் அறிமுகம்


* முதுமை பற்றிய முதுமையடையாதவர்களின் கண்ணோட்டம்.

* முதுமை பற்றிய பொதுவான சமூகக்கண்ணோட்டம்

* முதுமையின் உண்மையான சவால்களும் பிரச்சினைகளும்.

* முதுமை பற்றிய கலாசார-பண்பாட்டுக் கருத்தியல்கள்

* முதியவர்களைப்பற்றிய சமூகக்கண்ணோட்டத்தில் ஏற்படவேண்டிய மாற்றங்கள்




### எமது குடும்பம்.

விடிகாலையிலெழுந்து வேலைக்குப் போகும் அப்பா
இருள் சூழ்ந்த பிறகு வீட்டுக்கு வருவார்

விடிகாலையிலெழுந்து வேலைக்குப் போகும் அம்மா
இருள் சூழ்ந்த பிறகு வீட்டுக்கு வருவார்

விடிகாலையிலெழுந்து பள்ளிக்கூடம் செல்லும் நான்
பள்ளிக்கூடம் விட்டு வகுப்புக்கள் முடிந்து
இருள் சூழ்ந்த பிறகு வீட்டுக்கு வருவேன்

எமக்கென இருக்கிறது

நவீன வசதிகளுடனான அழகிய வீடொன்று

--
தக்ஷிலா ஸ்வர்ணமாலி கவிதைகள்
தமிழில் – எம்.ரிஷான் ஷெரீப்

('எதுவரை' இணைய இதழிலிருந்து
நன்றியுடன் பிரசுரமாகிறது
eathuvarai.net/?p=1850)

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.